(உ) மூட்டைப் பூச்சி மருந்துகளால் மக்கள் உயிருக்கு அபாயம் ஏற்படாவண்ணம் அவற்றை நீர்த்த நிலையில் மட்டுமே விற்க வேண்டுமெனக் கட்டளையிடுவதற்காக இறக்குமதி வர்த்தகக் கட்டுப்பாட்டு லைசென்ஸ் விதிகள், விஷப்பொருள் விதிகள் ஆகியவற்றைத் திருத்த இந்திய அரசாங்கம் யோசித்து வருகிறது.

டாக்டர் ஏ. சீனிவாசன்: தற்காலிகமாக இந்த மூட்டைப் பூச்சி மருந்தை எல்லோருக்கும் விற்காமல் இருக்க ஏதாவது வழி செய்ய முடியுமா?

கனம் திரு. பி. கக்கன் : எல்லோருக்கும் விற்கமாட்டார்கள். யாருக்கு விற்க வேண்டுமென்று பார்த்து அதன்படிதான் விற்கப் படும்.

டாக்டர் ஏ. சீனிவாசன் : யார் வேண்டுமானாலும் கடையில் நாலணா கொடுத்து வாங்கலாம். ஆகையால் கனம் மந்திரி அவர்கள் சொல்வது சரியாகப் படவில்லை. இருந்தாலும் மறுபடியும் பரிசீலனை செய்து கடையில் நாலணா எட்டணா கொடுத்து வாங்கி அனுவசியமாக உயிரை விடுகிறவர்களைத் தடுக்கவேண்டும். உயிரை விடுவதால் ஃபுட் பிராப்ளம் ஓரளவுக்குத் தீர்ந்துவிடுகிறது என்றாலும் அது நாகரிகத்திற்கு விரோதமாக இருப்பதால் கொஞ்ச நாளைக்கு அதை விற்காமல் தடை செய்தால் அதைச் சாப்பிட்டு உயிரை விடும் ஏழைகள் காப்பாற்றப்படுவார்கள். அதை ஏழைகள் தான் சாப்பிட்டுவிட்டு பிராணனை விடுகிறார்கள்.

DEPUTY CHAIRMAN : It is not a supplementary question It is only a statement.

DR. A. SREENIVASAN : I am explaining why it must be stopped.

DEPUTY CHAIRMAN : Next question.

Fire-arms.

* 174 *Q.*—DR. A. SREENIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state the number of persons who have been given licences for the use of fire-arms in the City of Madras, as on 1st March 1964?

THE HON. SRI P. KAKKAN : 1835.

டாக்டர் ஏ. சீனிவாசன் : இந்தத் துப்பாக்கிகள் யார் யாருக்குக் கொடுக்கப்படுகின்றன என்று சர்க்கார் சொல்லமுடியுமா?

கனம் திரு. பி. கக்கன் : பலபேர்கள் கேட்கிறார்கள். பல காரணங்களையும் பரிசீலனை செய்து யாருக்குக் கொடுக்க முடியுமோ அதைப் பார்த்து அவர்களுக்குத்தான் அவை கொடுக்கப்படுகின்றன.

டாக்டர் ஏ. சீனிவாசன் : சென்ற கார்ப்பரேஷன் தேர்தலில் சில காண்டிடேட்டுகள் சில பேர்களை துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தியதாகவும் புரளி பண்ணியதாகவும் காதில் விழுந்தது.

நாமினேஷன் ஸ்குருட்டினி செய்ததும் யார் காண்டிடேட்டோ அவர்கள் துப்பாக்கிகளை போலீசில் சரண்டர் செய்யும்படி கவர்ன்மெண்ட் சொல்லுமா ?

கனம் திரு. பி. கக்கன் : எலக்ஷனில் நிற்கிறவர்கள் குடிமக்களுக்குத் தொண்டு செய்வதற்காக வருகிறார்கள். துப்பாக்கியால் சுடுவதற்காக வரவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வரும்போது தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

டாக்டர் ஏ. சீனிவாசன் : அனேக பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். போலீசில் சலுகை இருக்கிறது. என்னைப்போல இருப்பவர்கள் மீதுதான் ஆக்ஷன் எடுப்பார்கள். ஆகையால் காண்டிடேட் நாமினேஷன் பைல் செய்து ஸ்க்ரூட்டினி ஆனவுடன் போலீசில் துப்பாக்கிகளை சரண்டர் பண்ணுமாறு செய்தால் ஜனங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

கனம் திரு. பி. கக்கன் : துப்பாக்கி வைத்துக்கொள்பவர்கள் பணக்காரர்கள் ஏழைகள் என்றில்லை. யார் குற்றம் செய்தாலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். கனம் அங்கத்தினர் சொல்வதைப் பரிசீலனை செய்து பார்க்கிறேன்.

திரு. ஆர். வெங்கடாசலம் : துப்பாக்கி லைசன்சு எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

கனம் திரு. பி. கக்கன் : மூன்று காரணங்களை வைத்துத் தான் துப்பாக்கி லைசன்சு கொடுக்கப்படுகிறது.

(1) Applicant's reliability.

(2) His ability to keep the weapon safe from theft or misuse.

(3) His need for such a weapon.

திரு. எம். சுப்பையா செட்டியார் : அரசியல் காரணங்களுக்காக துப்பாக்கி லைசன்சு கொடுப்பது மறுக்கப்பட்டதா ?

கனம் திரு. பி. கக்கன் : அப்படி மறுக்கப்பட்டதாக என்னிடத்தில் தகவல் இல்லை. அவசியமான காரணங்களுக்காகத்தான் தவிர்க்கப்பட்டிருக்கும்.

Overbridges.

* 175 *Q.*—Sri K. S. ABDUL WAHAB : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct overbridges at railway level crossings in Tiruchirappalli town; and

(*b*) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI V. RAMAIAH (*a*) & (*b*) : Consideration of proposals for the construction of overbridges at the existing level crossings at mile 197/6 of the Grand Southern Trunk Road, south of